நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 24.11.2023

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **நவம்பர்** மாதம் **30 ம்** தேதி **வியாழன் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் திரு. S.P.M.செல்வசுரேஷ்பெருமாள் அவர்கள் அளித்துள்ள கீழ்க்காணும் பொருள் மன்றத்தின் பார்வைக்கு

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் (MS) 270 நாள் 18.06.2004ல் பேரூராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அதன் பின் அரசாணை நிலை எண் 154 நாள் 09.08.2010ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 47241 மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 19377 ஆகும்.இந்நகராட்சி பகுதியில்வளர்ச்சியடைந்த பகுதியில் 30 சதவிகிதத இடத்திற்கு மேல் ஆதின மடத்திற்குரிய இடமாகும்.. மீதமுள்ள பகுதிகள் பெரும்பாலும் 5 அடி முதல் 8 அடி அகலம் கொண்ட சாலைகள் மற்றும் தெருக்காளாக உள்ளது. மேற்கண்ட சாலைகள் மற்றும் தெருக்கள் அனைத்தும் பேரூராட்சி காலத்தில் அமைக்கப்ட்ட சாலைகளாக உள்ளது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர், மேற்கண்ட பகுதியில் புதிய குடியிப்புகள் கட்டவோ அல்லது, ஏற்கனவே அமையப்பெற்று வீடுகளை இடித்து புதிய கட்டிடம் கட்டுமான பணிகள் மேற்கொள்ள கட்டிடவரைபட அனுமதி கோரும் போது, நகராட்சி சட்ட விதிகளின் படி 10 அடி அகலம் கொண்ட சாலைகளாக இருந்தால் மட்டுமே கட்டிட வழங்க இயலும் என அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இதனால் பொது மக்கள் கட்டிட அனுமதி பெற இயலாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனை தவிர்க்கம் பொருட்டு, இந்நகராட்சி பகுதியில் முழுமைத்திட்டம் (Master Plan) தயார் செய்யப்படாத நிலையில், ஏழைகள் வாழும் பகுதி, தொடர் கட்டுமான பகுதி ஏதும் தனித்தனியே இல்லாததால், கட்டிட அனுமதி கோரி வின்னப்பிக்க இயலாதி நிலை உள்ளது. எனவே விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு முழுமை திட்டம் (Master Plan) தயார்செய்யவும், அதுவரை வளர்ச்சியடைந்த பகுதிகளில் சர்வே ஆவணங்களில் உள்ள தெருக்களின் அகலத்தின் படி கட்டிட அனுமதி வழங்க வழிவகை செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வழியாக அரசினை கோர மன்றம் முடிவுசெய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியானது, பேரூராட்சியில் இருந்து தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி என்பதாலும், பேரூராட்சியாக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட சாலைகளின் அகலத்தினை தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபின்னர், சாலையின் அகலத்தினை மாற்றியமைக்க இயலாது என்பதாலும், நகராட்சியில் முழுமைத்திட்டம் (Master Plan) தயார் செய்யப்படாத நிலையில், பொது மக்களின் நலன் கருதி, முழுமைத்திட்டம் (Master Plan) தயார் செய்திடவும், அதுவரை வளர்ச்சியடைந்த பகுதிகளில் சர்வே ஆவணங்களில் உள்ள தெருக்களின் அகலத்தின் படி கட்டிட அனுமதி வழங்க வழிவகை செய்ய வேண்டி, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் வழியாக அரசினை கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 360 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

09வது மாநில அளவிளான தொழில்நுட்ப குழு கூட்டம் (State Level Technical Committee) 05.09.2023 ன் படி, அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் புதியாக பூங்கா அமைக்கும் பொருட்டு, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 2 வ்து வார்டு பகுதியில் புதியதாக பூங்கா அமைக்கும் பணிக்காக கீழ்க்கண்ட விவரப்படியான நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

| வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | மத்திய அரசு மான்யம் ரூ. | மாநில அரசு மான்யம் ரூ | நகராட்சி பங்குத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 பூங்கா நகர் சர்வே எண் 485/2 ல் புதியதாக பூங்கா அமைத்தல் | 9.00 இலட்சம் | 5.00 இலட்சம் | 3.00 இலட்சம் | 1.00 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு**

05/09/2023 தேதிய 09வது மாநில அளவிளான தொழில்நுட்ப குழு கூட்ட நடவடிக்கைளின் படி அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் மேற்கண்ட விவரப்படி புதிய பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்காக ஒதுக்கப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.7.35 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 361 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குரிய பொதிகையடி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், உள்ள 100 HP திறன்கொண்ட மோட்டார் எண் 1 மற்றும் 2 ல் பழுதடைந்த மோட்டர்களையும் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள செய்ய வேண்டி 31.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய குடிநீர் நீரேற்று நிலையத்தில் பழுதடைந்துள்ள 100 ஹெச்பி மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யும் பணி மதிப்பீடு ரூ. 2.20 இலட்சம் நக.எண் 2033/2023/இ1 | முருகன் எலக்ட்ரிக்கல்ஸ் கல்லிடைக்குறிச்சி | 0.56% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 7.54% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. முருகன் எலக்ட்ரிக்கல்ஸ் கல்லிடைக்குறிச்சி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்.

**தீர்மான எண் : 362 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த வேண்டி 31.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மின் கம்பியாளர் 1 மற்றும் உதவியாளர் 2 எண்ணம் ஓப்பந்த அடிப்படையில் வழுங்கதல்<br>மதிப்பீடு ரூ. 2.15இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை | 0.09% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | ஹெச்.,ஏ.கீயூ பில்டிங் சொலுசன், மதுரை | 6.33% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஓப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை. என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 363 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.5</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஓப்பந்த அடிப்படையில் பணியமர்த்த வேண்டி 31.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள திறனற்ற பணியாளர்கள் 8 எண்ணம் ஓப்பந்த அடிப்படையில் வழுங்கதல்<br>மதிப்பீடு ரூ. 7.30 இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | ஹெச்.,ஏ.கீயூ பில்டிங் சொலுசன், மதுரை | 2.82% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஓப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை. என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழுங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 364 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.6</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவு பணி மேற்கொள்ள ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் தொழில்நுட்ப உதவியாளரை ஓப்பந்த அடிப்படையில் பணியமர்த்த வேண்டி 31.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவு பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த தொழில்நுட்ப உதவியாளர் 1 எண்ணம் ஓப்பந்த அடிப்படையில் வழுங்கதல் | எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை | 0.25% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | ஹெச்.,ஏ.கீயூ பில்டிங் சொலுசன், மதுரை | 10.50% மதிப்பீட்டைவிட |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு ரூ.1.20 இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | | அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் எஸ்.கே.எஸ்.எஸ் பாலிமேக் பிரைவட் லிமிட்டட், சென்னை. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 365 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் வார்டு எண் 2 பூங்கா நகர் பகுதியில் புதியதாக அமைக்கப்படவுள்ள பூங்கா பணிக்காக 20.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 பூங்கா நகர் சர்வே எண் 485/2 ல் புதியதாக பூங்கா அமைத்தல்<br>மதிப்பீடு ரூ.9.00 இலட்சம்<br>ந.க.எண் 832/2023/இ1 | திரு.கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.03%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி.சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 0.38%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 366 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 12 காரையார் பகுதி அகஸ்தியர் நகர் காணிகுடியிருப்பு, சின்னமயிலாறு மற்றும் சேர்வலார் தருவாட்டான் பாறை காணிக்குடியிருப்பு பகுதியில் உள்ள நீர் தேக்க தொட்டிகளின் மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில், திரவகோளரின் கலக்க வேண்டி தேவையான திரவகுளோரின் கொள்முதல் செய்ய வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, திரவக்குளோரின் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந-க.எண் 2381/2023/இ1

**தீர்மான எண் : 367 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தின் மூலம் இந்நகர் பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில், திரவகோளரின் கலக்க வேண்டி தேவையான திரவகுளோரின் கொள்முதல் செய்ய வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, திரவக்குளோரின் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந-க.எண் 2381/2023/இ1 **தீர்மான எண் : 368 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி வார்டு எண் 13 பனையடியான் கோவில் தெருவில் புதியதாக வெள்ள தடுப்பு சுவர் அமைக்கவும், வார்டு எண் 10 டானா மெயின் ரோடு பகுதியில் பாலம் அருகே சிதிலமடைந்த சிமெண்ட் சாலையினை பொது மக்கள் நலன் கருதி, பள்ள மேடுகளைபேட்ச் ஓர்க் மூலம் சரிசெய்யவும், வார்டு எண் 1 மற்றும் வார்டு 21 பகுதியில் சிதிலமடைந்த சிறபாலங்களை புதியதாக மாற்றி அமைக்வும், இந்நகராட்சி பணி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்ட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக்குறிப்பு**

பணிகளின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, பணிகளை உடன் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், மற்றும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 369 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி கா'ளிபார்விளை, டாணா கதவு எண் 44/10 ல் குடியிருந்து வரும் திரு. முத்துநவீன் என்பவர், தனது வீட்டின் தென் பகுதியில் உள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாயின் குறுக்கே( 10 அடி அகலம், 45 அடி நீளம்) தனது சொந்த செலவில் பாலம் அமைத்துக்கொள்ள நகராட்சியின் தடையின்னை சான்று வேண்டி, விண்ணபித்துள்ளார் மேற்கண்ட இடம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர்(பொ) அவர்களால் நேரில் ஸ்தல அய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்கண்ட வடக்கு கோடை மேலழகியான் கால்வாயானது பொது பணித்துறைக்கு பாத்தியப்பட்டதால், பொது பணித்துறையின் அனுமதி பெற்று பாலம் அமைப்பதற்கு நகராட்சிக்கு தடையேதும் இல்லை என சான்று அளிக்கலாம் என குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி மனுதாருக்குஅறிவிப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2435/23/எப்1

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின் படி, மனுதாரர் திரு. முத்து நவீன் என்பவருக்கு, பொதுப்பணித்தறையின் அனுமதி பெற்று பாலம் அமைப்பதற்கு தடையேதும் இல்லை என சான்று அளிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 370 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள், சந்தனமாரியம்மன் கோவில் அருகே உள்ள கட்டணக்கழிப்பிடம், கீழரதவீதி கட்டணக்கழிப்பிடம் மற்றும் காவல் நிலையம் அருகாமையில் உள்ள கட்டணக்கழிப்பிடம் ஆகிய மூன்று எண்ணங்களுக்கும், இந்நகராட்சி பல்வகை கேட்பு பதிவேட்டின் படி, 31.03.2024 ல் முந்தைய குத்தகைதார்களின் குத்தகை அனுபவ உரிமை முடிவடைகிறது. எனவே மேற்படி மூன்றாண்டு குத்தகை இனங்களை 2024-25, 2025-26 மற்றும் 2026-27ம் ஆண்டிற்கு குத்தகை அனுபவ உரிமை வழங்க வேண்டி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் , அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 25000/- மற்றும் இந்நகராட்சிபொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்

**அலுவலகக்குறிப்பு**

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 371 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

விக்கிரமசி ங்கபுரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2023-24ம் ஆண்டிற்கான தளவாடசாமண்கள் வாங்க 29.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கான ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பொருட்களின் விவரம் | The Thoothukudi District Cleaning Products Producers service Industrial co-operative society Ltd | Thanthai Periyar contractor Lobours service Industrial co-operative society Ltd | Tirunelveli District contractor Lobours service Industrial co-operative society Ltd |
|---|---|---|---|---|
| 1 | மண்வெட்டி பெரியது (மரக்கைப்பிடி) | 1125.00 | 1135.00 | 1130.00 |
| 2 | மண்வெட்டி சிறியது (மரக்கைப்பிடி) | 750.00 | 760.00 | 755.00 |
| 3 | வாறுகால் கரண்டி (14*16 ) | 850.00 | 860.00 | 855.00 |
| 4 | 6 அடி நீளம் மூங்கில் கம்புடன் வாறுகால் கரண்டி (10*12 ) அடி | 750.00 | 760.00 | 755.00 |
| 5 | 5 அடி மூங்கில் கம்புடன் கொண்ட தூரப்புமார் | 600.00 | 655.00 | 650.00 |
| 6 | தென்னை துடைப்பம் | 100.00 | 155.00 | 150.00 |
| 7 | கடப்பாறை | 1500.00 | 1555.00 | 1550.00 |
| 8 | சிறியவாளி | 450.00 | 460.00 | 455.00 |
| 9 | சிறிய கப் | 60.00 | 68.00 | 65.00 |
| 10 | Brush Cuteer | 8485.00 | 8498.00 | 8490.00 |
| 11 | கையுறை | 140.00 | 148.00 | 145.00 |
| 12 | அலுமினிய கூடை | 490.00 | 655.00 | 650.00 |
| 13 | 4 பல் முள் கரண்டி | 710.00 | 720.00 | 715.00 |
| 14 | சுண்ணாம்பு வைப்புக்கூடை | 400.00 | 455.00 | 450.00 |
| 15 | வாறுகால் அகப்பை வட்டம் 5 நாகத்தகடு | 600.00 | 655.00 | 650.00 |
| 16 | உருக்கு அரிவாள் | 690.00 | 705.00 | 700.00 |
| 17 | வெள்ளைநிற தொப்பி | 68.00 | 75.00 | 70.00 |
| 18 | குப்பைசேகரிப்பு கறுப்பு கலர் பை | 20.00 | 30.00 | 25.00 |

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகதாரப்பிரிவு அவசரம் மற்றும் அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கோரிய The Thoothukudi District Cleaning Products Producers service Industrial co-operative society Ltd நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான

செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்., ந.க.எண் 1161/2023/எச்1

**தீர்மான எண் : 372 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2023-24ம் ஆண்டிற்கானசுண்ணாம்பு பவுடர், பிளீசிங் பவுடர் வாங்க 01.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பொருட்கள் விபரம் | The Melagaram printing workers Industrial Co-operative Soceity limited | Thanthai Periyar contractor Lobours service Industrial co-operative society Ltd | S.G.Industries |
|---|---|---|---|---|
| 1 | சுண்ணாம்பு பவுடர் | 51.00 | 40.00 | 55.00 |
| 2 | பிளிச்சீங் பவுடர் | 11.00 | 9.00 | 10.00 |

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகதாரப்பிரிவு அவசரம் மற்றும் அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கோரிய Thanthai Periyar contractor Lobours service Industrial co-operative society Ltd நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்., ந.க.எண் 1161/2023/எச்1

**தீர்மான எண் : 373 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2023-24ம் ஆண்டிற்கான மழை கோட் (Rain Coat) வாங்க 01.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பொருட்கள் விபரம் | Parisith Traders | Kamala Traders | RSA Traders |
|---|---|---|---|---|
| 1 | 1 st Quality Rain coat with name printed | 1096+18% | 1250+18% | 1390+18% |

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகதாரப்பிரிவு அவசரம் மற்றும் அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கோரிய Thanthai Parisith Traders நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்., ந.க.எண் 1161/2023/எச்1

**தீர்மான எண் : 374 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு 2023-24ம் ஆண்டிற்கான Twinbin with stand 80litre வாங்க 01.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | பொருட்கள் விபரம் | Parisith Traders | Kamala Traders | RSA Traders |
|---|---|---|---|---|
| 1 | Twin bin with stand 80 lit | 11800+18% | 14000+18% | 13500+18% |

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகதாரப்பிரிவு அவசரம் மற்றும் அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி கோரிய Thanthai Parisith Traders நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக

உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்., ந.க.எண் 1161/2023/எச்1

**தீர்மான எண் : 375 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.17</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பொதிகையடி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கு பகுதியில், அம்ரூட் 2.0 குடிநீர் திட்டத்திற்காக மண் தோண்டும் பணி மேற்கொண்ட போது உடைக்கப்பட்ட பாறைகள், சிறிய துண்டுகளாக கொட்டி வைக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் புதர்கள் உருவாகி விச ஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. எனவே பாதுகாப்பு கருதி மேற்கண்ட 525 கன மீட்டர் (including Voids) அளவு உள்ள கற்களை சுத்தம் செய்யும் பொருட்டு பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்ற அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பாதுகாப்பு கருதி மேற்கண்ட 525 கன மீட்டர் (including Voids) அளவு உள்ள கற்களை சுத்தம் செய்யும் பொருட்டு பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்ற அனுமதிக்கலாம்.,

**தீர்மான எண் : 376 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/-**

**திரு.எஸ்.பி.எம்.செல்வசுரேஷ்பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/